24 MAR 2008
600 005
016432

**சுருக்கம்**

பணியமைப்பு – நகராட்சிகளில் காலியாக உள்ள பல்வேறு பணியிடங்களை நிரப்ப அனுமதித்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நப.1) துறை

**அரசாணை(நிலை) எண்.39** **நாள்.14.03.2008.**

**படிக்கப்பட்டது:**

1. அரசாணை (பத்தாண்டு) எண்.19, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 18.01.2007.
2. நகராட்சி நிர்வாக ஆணையரின் கடிதம் ந.க.எண். 33557/06/கே.1, நாள் 03.10.2007.

**ஆணை:–**

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் அனைத்து நகராட்சிகளில் காலியாக உள்ள காலிப்பணியிடங்களை நிரப்ப நகராட்சி நிர்வாக ஆணையருக்கு அனுமதி வழங்கி ஆணை வெளியிடப்பட்டது. நகராட்சி நிர்வாக ஆணையர், மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் சில நகராட்சிகளில் இருந்த காலிப்பணியிடங்கள் பற்றிய விவரம் முன்னர் அரசுக்கு அனுப்பாமல் விடுபட்டுவிட்டது என்றும், அவ்வாறு விடுபட்டுள்ள பல்வேறு நகராட்சிகளில் காலியாக உள்ள 227 பணியிடங்களை நிரப்ப அனுமதி வழங்கி ஆணை வெளியிடுமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. நகராட்சி நிர்வாக ஆணையரின் செயற்குறிப்பு அரசால் பரிசீலிக்கப்பட்டது. நகராட்சி நிர்வாக ஆணையரின் செயற்குறிப்பினை ஏற்று, இவ்வாணையின் இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள நகராட்சிகளில் பல்வேறு பணிவிதிகளின்கீழ் உள்ள காலிப் பணியிடங்களுக்கான பணியாளர்களை சம்பந்தப்பட்ட பணி விதிகளின்படியும், கீழ்க்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டும் நியமனம் செய்வதற்கு அனுமதி வழங்கி அரசு ஆணையிடுகிறது:–

i) காலியிடங்களில் பணியாளர்கள் நியமனம் செய்யப்படும்போது கீழ்காணும் அரசாணைகள் மற்றும் கடிதங்களில் வெளியிடப்பட்டுள்ள ஆணைகள் / நிபந்தனைகள் தவறாது பின்பற்றப்பட வேண்டும்

1. அரசாணை (நிலை) எண்.91, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை, நாள் 06.07.2006.
2. அரசாணை (நிலை) எண்.95, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை, நாள் 12.07.2006.
3. கடிதம் (நிலை) எண்.121, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை, நாள் 10.08.2006.
4. கடிதம் (நிலை) எண்.187, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை, நாள் 16.10.2006.

ii) மேலும், நகராட்சியிலுள்ள அனைத்துப் பணியாளர்களுக்கான சம்பளம் மற்றும் ஓய்வூதியம் குறித்த செலவினம், அந்நகராட்சியின் மொத்த வருவாயில் 49%-க்கு மிகாமல் இருக்க வேண்டும் (expenditure of the Urban Local Body on pay and pension charges should not exceed 49% of the revenue after filling up of vacant posts).

iii) நகராட்சிகளால், கடனுக்காகத் திருப்பி செலுத்தும் தொகை(debt charges) 25%–க்குள் இருக்க வேண்டும்.

iv) 49 சதவிகிதத்திற்கு அதிகமாக பணியாளர்களுக்கு செலவினம் ஏற்படும் நகராட்சிகளில் காலிப் பணியிடங்களை நியமனம் செய்ய, அரசின் ஒப்புதலைப் பெற வேண்டும்.

3. மேற்சொன்னவாறு, நகராட்சிகளில் காலியாக உள்ள, இணைப்பில் குறிப்பிட்டுள்ள பணியிடங்களில் பணியாளர்களை நியமனம் செய்ய உடனடி நடவடிக்கை மேற்கொள்ளுமாறு நகராட்சி நிர்வாக ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

கே. தீனபந்து
அரசுச் செயலாளர்

பெறுநர்
நகராட்சி நிர்வாக ஆணையர், சேப்பாக்கம், சென்னை – 600 005.

நகல்:–
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அநமு.2) துறை, சென்னை – 600 009.
இருப்பு கோப்பு / உதிரி நகல்

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

17/2/08
பிரிவு அலுவலர்.

<u>இணைப்பு</u>

| வ. எண். | நகராட்சியின் பெயர் | விடுபட்ட பணியிடங்களின் விவரம் | | மொத்த பணியிடங்கள் |
|---|---|---|---|---|
| | | பணியிடத்தின் பெயர் | எண்ணிக்கை | |
| 1. | 2. | 3. | 4. | 5. |
| 1. | அரக்கோணம் | குழாய் ஆய்வாளர் | 1 | 35 |
| | | பணி ஆய்வர் | 1 | |
| | | கேங்க் மஸ்தூர் | 3 | |
| | | பூங்கா காவலர் | 1 | |
| | | குழாய் பொருத்துநர் | 2 | |
| | | குழாய் திறப்பாளர் | 1 | |
| | | தலைமை நீரேற்று நிலைய காவலர் | 1 | |
| | | களப்பணி ஆய்வாளர் | 1 | |
| | | ஓட்டுநர் (பொது சுகாதாரம்) | 1 | |
| | | மகப்பேறு ஆயா | 3 | |
| | | துப்புரவு பணியாளர் | 20 | |
| 2. | ஆரணி | வருவாய் உதவியாளர் | 3 | 4 |
| | | பதிவுறு எழுத்தர் | 1 | |
| 3. | புதுக்கோட்டை | இளநிலை உதவியாளர் | 3 | 94 |
| | | வருவாய் உதவியாளர் | 4 | |
| | | தட்டச்சர் | 1 | |
| | | மீட்டர் பழுதுபார்ப்பவர் | 1 | |
| | | மின்பணியாளர் நிலை–1 | 1 | |
| | | மின்பணியாளர் நிலை–2 | 2 | |
| | | குழாய் ஆய்வர் | 1 | |
| | | குழாய் பொருத்துநர் | 1 | |
| | | பணி ஆய்வர் | 2 | |
| | | பல்வகை சுகாதார பணியாளர் | 3 | |
| | | மகப்பேறு உதவியாளர் | 3 | |
| | | மகப்பேறு ஆயா | 3 | |
| | | துப்புரவு பணி மேற்பார்வையாளர் | 3 | |
| | | களப்பணி உதவியாளர் | 1 | |
| | | துப்புரவு பணியாளர் | 55 | |
| | | ஓட்டுநர் | 1 | |
| | | மருந்தாளுநர் | 1 | |
| | | கேங்க் மஸ்தூர் | 8 | |

| | | | | |
|---|---|---|---|---|
| 4. | குளச்சல் | மகப்பேறு உதவியாளர் | 1 | |
| | | துப்புரவு பணியாளர் | 4 | 5 |
| 5. | விருதுநகர் | சுகாதார பார்வையாளர் | 1 | |
| | | மகப்பேறு உதவியாளர் | 3 | 4 |
| 6. | குழித்துறை | பதிவறை எழுத்தர் | 1 | |
| | | மின்கம்பியாளர் | 1 | |
| | | லாரி ஓட்டுநர் | 1 | 6 |
| | | துப்புரவு பணியாளர் | 3 | |
| 7. | தென்காசி | வருவாய் உதவியாளர் | 1 | |
| | | துப்புரவு பணி மேற்பார்வையாளர் | 1 | |
| | | மகப்பேறு உதவியாளர் | 1 | 4 |
| | | துப்புரவு பணியாளர் | 1 | |
| 8. | செங்கோட்டை | துப்புரவு பணியாளர் | 1 | 1 |
| 9. | திருவள்ளூர் | இளநிலை உதவியாளர் | 1 | |
| | | அலுவலக உதவியாளர் | 1 | |
| | | துப்புரவு பணியாளர் | 4 | 11 |
| | | களப்பணி உதவியாளர் | 1 | |
| | | ஓட்டுநர் | 2 | |
| | | சுகாதார பார்வையாளர் (மகப்பேறு) | 1 | |
| | | மகப்பேறு உதவியாளர் | 1 | |
| 10. | ஸ்ரீவில்லிபுத்தூர் | இளநிலை உதவியாளர் | 3 | |
| | | தட்டச்சர் | 1 | |
| | | துப்புரவு பணியாளர் | 6 | 10 |
| 11. | வாலாஜாபேட்டை | துப்புரவு பணியாளர் | 4 | 4 |
| 12. | கோபிசெட்டிபாளையம் | காவலர் (பொதுப்பணி பொறியியல் பணி) | 5 (2+3) | |
| | | துலக்குநர்<br>மகப்பேறு உதவியாளர் | 1<br>3 | 9 |
| 13. | ஆலந்தூர் | அலுவலக உதவியாளர் | 3 | 3 |
| 14. | கம்பம் | களப்பணி உதவியாளர் | 1 | 1 |
| 15. | அறந்தாங்கி | அலுவலக உதவியாளர் | 2 | 2 |

| | | | | |
|---|---|---|---|---|
| 16. | இராசிபுரம் | வருவாய் உதவியாளர் | 1 | 2 |
| | | மகப்பேறு ஆயா | 1 | |
| 17. | ஆத்தூர் | இளநிலை உதவியாளர் | 1 | 1 |
| 18. | மேட்டூர் | மின் பணியாளர் நிலை–1 | 5 | 16 |
| | | கேங்க் மஸ்தூர் | 3 | |
| | | களப்பணி உதவியாளர் | 1 | |
| | | கழிவுநீர்பண்ணை பணியாளர் | 7 | |
| 19. | இடப்பாடி | இளநிலை உதவியாளர் | 1 | 4 |
| | | வருவாய் உதவியாளர் | 1 | |
| | | பணி ஆய்வர் | 1 | |
| | | குழாய் பொருத்துநர் நிலை–1 | 1 | |
| 20. | தர்மபுரி | பணி ஆய்வர் | 1 | 1 |
| 21. | கிருஷ்ணகிரி | குழாய் பொருத்துநர் நிலை–2 | 1 | 1 |
| 22. | கரூர் | பதிவறை எழுத்தர் | 1 | 6 |
| | | குழாய் பொருத்துநர் நிலை–2 | 2 | |
| | | மின் பணியாளர் நிலை–1 | 1 | |
| | | மகப்பேறு உதவியாளர் | 2 | |
| 23. | சங்கரன்கோவில் | இளநிலை உதவியாளர் | 1 | 1 |
| 24. | உசிலம்பட்டி | துப்புரவு பணியாளர் | 2 | 2 |
| | | மொத்தம் | | 227 |

கே. தீனபந்து
அரசுச் செயலாளர்

//உண்மை நகல்//

17/3/08
பிரிவு அலுவலர்
17/3/08